# <u>ADM COURT, SANKARANKOVIL</u>

**தேதி 07.07.2025**

**அசல் வழக்கு எண். 295/2012**

**<u>பி.வா.சா.1 மீண்டும் ஆஜர் சத்தியபிரமாணத்தின் பேரில் வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் யாருக்காக இவ்வழக்கில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் நான் எனது சொத்து பொறுத்து இவ்வழக்கில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். இவ்வழக்கில் நான் என்ன எதிர்பரிகாரம் கோரியுள்ளேன் என்றால் தபசில் சொத்து என்னுடைய சொத்து என்று விளம்புகை பரிகாரம் கோரியுள்ளேன். வழக்குரை தபசில் சொத்திற்கான பட்டா யார் பெயரில் உள்ளது என்றால் ராஜாமணி என்பவர் பெயரில் உள்ளது. என்னுடைய பெயரில் தபசில் சொத்து குறித்து பட்டா இல்லை என்றால் சரிதான். வழக்கு தபசில் சொத்து குறித்து எனது மனைவி பெயரிலும் பட்டா இல்லை என்றால் சரிதான்.

2. வழக்கு தபசில் சொத்தை மூவேந்தர் என்பவரிடமிருந்து ரூ.13,50,000/– க்கு கிரையம் பெற்றேன் என்றால் சரிதான். மேற்படி கிரையம் எந்த ஆண்டு ஏற்பட்டது என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. மேற்படி தபசில் சொத்தை மூவேந்தரிடமிருந்து நான் எனது மனைவி பாப்பா பெயரில் கிரையம் பெற்றேன். நான் தாக்கல் செய்த பி.வா.சா.ஆ.7 ஆவணம் 2019ம் வருடம் கிராம நிர்வாக அலுவலரிடமிருந்து பெறப்பட்டது என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. திருநெல்வேலி SP அலுவலகத்தில் யாருக்கு எதிராக புகார் அளித்தேன் என்றால் கணேசன் என்பவருக்கு எதிராக புகார் அளித்தேன். மேற்படி புகாரை நானும், மூவேந்தரும் கணேசனுக்கு எதிராக அளித்தோம். மேறப்டி புகார் மனுவை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். மேற்படி புகார் மனு குறித்து நடவடிக்கை எதுவும் எடுக்கப்பட்டதா என்றால் நிலையத்தில் வைத்து மேற்படி பிரச்சனைக்கு நீதிமன்றத்தில் பரிகாரம் கோரிக்கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டது.

3. வழக்கு சொத்து குறித்து கிரையம் பெறுவதற்கு எனது மனைவி கணேசன் என்பவரை எப்போது சந்தித்தார் என்று எனது எதிர்வழக்குரையில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். கிரைய தொகையான ரூ.13,50,000/– யை நான் யாரிடம் கொடுத்தேன் என்றால் மூவேந்தர் என்பவரிடம் 3 தவணையாக

கொடுத்தேன். முதல்தவணையில் சுமார் ரூ.6,00,000/- கொடுத்தேன். அதன்பிறகு 2 வது தவணையாக சுமார் ரூ.3,00,000/- கொடுத்தேன். மூன்றாவது தவணையில் மீதத்தொகையை கொடுத்தேன். முதல்தவணை தொகையை நான் கொடுத்தபிறகு வழக்கு தபசில் சொத்தின் அனுபவத்தை என்னிடம் மூவேந்தர் ஒப்படைத்துவிட்டார். மேற்படி முதல்தவணை கிரைய பணத்தை எந்த வருடத்தில் கொடுத்தேன் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. எந்த வருடத்தில் தபசில் சொத்தை நான் கிரையம் பெற்றேன் என்றால் சுமார் 10-13 வருடங்களுக்கு முன்பாக தபசில் சொத்தை கிரையம் பெற்றேன். வழக்கு தபசில் சொத்து பொறுத்து எனக்கும் மூவேந்தருக்கும் இடையில் கிரையம் பெறுவதற்கு முன்பாக ஒப்பந்தம் ஏதும் ஏற்பட்டிருந்ததா என்றால் இல்லை. கிரைய தொகை ரூ.13,50,000/- தொகையை தவிர்த்து மீதி தொகை ஏதும் கிரையம் பொறுத்து கொடுக்கவேண்டியிருந்ததா என்றால் இல்லை. மேற்படி மீதித்தொகையை பொறுத்து எனது எதிர்வழக்குரையில் குறிப்பிடப்படவில்லை என்றால் பாக்கித்தொகை எதுவும் இல்லை, அதனால் குறிப்பிடவில்லை. தபசில் சொத்து கிரையம் வாங்குவதற்கு கணேசன் என்பவருக்கு ரூ.3700/- கமிஷன் தொகையாக கொடுத்தேனா என்றால் கொடுத்தேன். மேற்படி தொகை பற்றி எனது எதிர்வழக்குரையில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் கூறவில்லை.

4. கணேசன் என்பவர் தபசில் சொத்தில் 25 சென்டுக்கு பாதை கேட்டார் என்றால் சரிதான். ஆனால் நான் கொடுக்கவில்லை. மேற்படி 25 சென்ட் இடம் கேட்டு கணேசன் என்னை மிரட்டவில்லை என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்தபிறகுதான் பி.வா.சா.ஆ.7 ஆவணத்தை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேன் என்றால் சரிதான்.

**வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்குவிசாரணை தொடர்ச்சி ஒத்திவைக்கப்படுகிறது.**